பக்கங்கள் ஆறு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2026 கார்த்திகை 12 செவ்வாய்க்கிழமை (28-11-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 2

## யாழ்ப்பாண மண்ணில்

# ஆக்கிரமிப்பு ராணுவம் உள்ளவரை சமாதானக் கதவு மூடப்பட்டிருக்கும்

## மாவீரர் தின உரையில் சந்திரிகா அரசுக்கு தலைவர் பிரபா செய்தி

சாவகச்சேரி, நவம்பர் 28

யாழ்ப்பாண மண்ணை சிங்கள இராணுவம் ஆக்கிரமித்து நிற்கும் வரை சமாதானத்தின் கதவுகள் இறுக்கமாக மூடப்பட்டிருக்கும். இராணுவ அழுத்தத்திற்கு பணிந்து துப்பாக்கி முனையில் திணிக்கப்படும் சமரசப் பேச்சுக்களில் விடுதலைப்புலிகள் இயக்கம் ஒரு பொழுதும் பங்குபற்றப் போவதில்லை. இதுதான் சந்திரிகா அரசிற்கு நாம் விடுக்கும் செய்தி.

பாரிய இராணுவப் படையெடுப்பை முடுக்கி விட்டு, பல லட்சம் மக்களை இடம் பெயரச் செய்து வரலாற்றுப் பெருமை மிக்க யாழ். மண்ணை ஆக்கிரமிப்பதன் மூலம் சமாதான சூழ்நிலையும் சமரசத் தீர்வும் ஏற்பட்டு விடும் என சந்திரிகா அரசு எண்ணுமானால் அதைப் போல அரசியல் அசட்டுத்தனம் வேறெதுவும் இருக்க முடியாது.

— இவ்வாறு தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே பிரபாகரன் மாவீரர் தினத்தை ஒட்டி நேற்று தமிழீழ மக்களுக்கு ஆற்றிய உரையில் தெரிவித்தார்.

தேசியத் தலைவரின் உரை நேற்று மாலை 'புலிகளின் குரல்'வானொலியில் ஒலிபரப்பானது. அந்த உரையில் தலைவர் தெரிவித்ததாவது:-

எனது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய தமிழீழ மக்களே!

இன்று மாவீரர் நாள்.

எமது தேசத்தின் விடுதலைக்காக தமது இன்னுயிரை ஈகம் செய்த இலட்சிய வேங்கைகளை நாம் எமது இதயக் கோயிலில் நினைவு கூரும் புனித நாள்.

எமது மாவீரர்கள் இந்த மண்ணுக்காக மடிந்தவர்கள்; இந்த மண்ணின் விடிவிற்காக மடிந்தவர்கள்; எமது மண்ணில் எமது மக்கள் சுதந்திரமாக, கௌரவமாக, பாதுகாப்பாக வாழ வேண்டும் என்ற இலட்சியத்திற்காக மடிந்தார்கள்.

எமது மண் நாம் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்த மண்; மூதாதையோரின் பாதச் சுவடுகள் பதிந்த மண். எமது பண்பாடும் வரலாறும் வேர் பதிந்து நிற்கும் மண் எமக்கே சொந்தமாக வேண்டும் என்ற குறிக்கோளுக்காக எமது மாவீரர்கள் மடிந்தார்கள்; அந்நிய ஆதிக்க விலங்குகளால் கட்டுண்டு கிடக்கும் எமது தாயக மண்ணை மீட்டெடுத்து தன்னாட்சி உரிமை பெற்ற சுதந்திர தேசமாக உருவாக்கும் இலட்சியத்திற்காக எமது மாவீரர்கள் மடிந்தார்கள்.

எமது தாயக மண்ணை மீட்டெடுக்கும் புனிதப் போரில் எமது மாவீரர்கள் புரிந்த தியாகங்கள் மகத்தானவை. அவற்றைச் சொற்களால் செதுக்கிவிட முடியாது. உலக வரலாற்றில் எங்குமே என்றுமே நிகழாத அற்புதங்கள் இந்த மண்ணில் இந்த மண்ணிற்காக நிகழ்ந்திருக்கின்றன. அந்த வீரகாவியத்தை படைத்த ஆயிரமாயிரம் மாவீரரின் இலட்சியக்கனவு— அவர்களது ஆன்மீகதாகம்— என்றோ ஒரு நாள் நிறைவு பெறுவது திண்ணம்.



தமிழீழ மக்களுக்கு தேசியத் தலைவர் உரை நிகழ்த்துகையில் எடுக்கப்பட்ட படம்.

## மாவீரர் தின நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக நடந்தன

### துயிலும்இல்லங்களில் ஒளி வெள்ளம்

சாவகச்சேரி, நவ 28

மாவீரர் தினம் நேற்று தமிழீழம் எங்கும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் பாசறைகள், செயலகங்கள், மாவீரர் துயிலும் இல்லங்கள் மற்றும் பொது இடங்களில் நேற்றுக் காலை 9 மணிக்கு தமிழீழத் தேசியக் கொடி ஏற்றப்பட்டது. அதனை அடுத்து மாவீரர் தின நிகழ்வு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஞாயிறன்று மோதலில் 15 படையினர் பலி!

### அதிகாரிகள் உட்பட 26 பேர் காயம்

கொழும்பு, நவ. 28

யாழ்ப்பாணத்தில் ஞாயிறன்று நடைபெற்ற சண்டையில் 15 படையினர் கொல்லப்பட்டனர் என்றும் இரு அதிகாரிகள் உட்பட 26 பேர் காயமடைந்தனர் என்றும் ஸ்ரீலங்கா அரச தரப்பில் நேற்று தெரிவிக்கப்பட்டது.

யாழ். நகரை நோக்கி முன்னேற முயலும் படையினருடன் புலிகள் கடுமையாகப் போரிட்டு வருவதாகவும் படையினருக்கு பேரிழப்பு ஏற்பட்டு வருவதாகவும் செய்தி ஏஜென்ஸிகள் தெரிவிக்கின்றன.

(இ-ஐ)

## தமிழர் வாழ்கையைச் சீர்குலைப்பதே ஆக்கிரமிப்புப் போரின் நோக்கம்

எமது மண் மீதான எதிரியின் ஆக்கிரமிப்புப் போர் என்றுமில்லாதவாறு இன்று விஸ்வரூப பரிமாணம் பெற்றிருக்கிறது. எதிரியானவன் தனது முழுப்படை பலத்தையும் ஆயுத பலத்தையும் ஒன்று திரட்டி, தனது முழுத் தேசிய வளத்தையும் பயன்படுத்தி, யாழ்ப்பாண மண் மீது பாரிய படையெடுப்பை நிகழ்த்தி வருகிறான். பழமையும் பெருமையும் வாய்ந்த எமது பாரம்பரிய பூமி எதிரியின் படைபல சக்தியால் அழிக்கப்பட்டு வருகிறது. ஓயாத [illegible]க் கப் பொழியும் எதிரியின் எறிகணை வீச்சால் யாழ்ப்பாணத்தின் முகம் சிதைக்கப்பட்டு வருகிறது யாழ்ப்பாணத்தின் பொருள் வளத்தை சிதைத்து பண்பாட்டுச் சின்னங்களை அழித்து, தமிழரின் தேசிய வாழ்வைச் சீர் [illegible] ஆக்கிரமிப்புப் போரின் அடிப்படை நோக்கமாகும்.

(2 ஆம் பக்கம் பார்க்க)

## பலாலி ஷெல்லுக்கு குடும்பப் பெண் பலி!

### கெருடாவிலில் நேற்று சம்பவம்

பலாலி முகாமிலிருந்து நேற்று ஏவப்பட்ட ஷெல்லுக்கு கெருடாவில் வடக்கில் குடும்பப் பெண் ஒருவர் பலியானார்.

மோகனதாஸ் கிருஷ்ண தேவி (வயது 40) என்பவரே மரணமானவர் ஆவார்.

காயங்களுடன் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பின் அவர் மரணமானார். (இ-15-173)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தலைவரின் உரை: தொடர்ச்சி)

# தந்தை தொடக்கிய இனப்போருக்கு முழு வடிவம் கொடுத்த மகள் சந்திரிகா

இந்தப் போர் அரசு கூறுவதுபோல புலிகளுக்கு எதிரான போரல்ல. இது தமிழருக்கு எதிரான போர்; தமிழினத்திற்கெதிரான போர்; தமிழின அழிப்பை இலக்காக கொண்ட போர்; சிங்களப் பேரினவாதத்தின் இந்த இனப்போர் நீண்ட நெடுங் காலமாகவே நிகழ்ந்து வருகிறது. புலிகள் இயக்கத்தின் பிறப்பிற்கு முன்பிருந்தே நிகழ்ந்து வருகிறது. இதனைத் தொடக்கிவைத்தவர் சந்திரிகாவின் தந்தையார். இப்பொழுது சந்திரிகாவின் அரசு இந்த இனப்போருக்கு முழு வடிவம் கொடுத்திருக்கிறது. தமிழரின் உயிரையும் உடைமையையும் தமிழரின் நிலத்தையும் வளத்தையும் ஒட்டுமொத்தத்தில் தமிழரின் தேசிய அடையாளத்தையே சிதைத்துவிடும் நோக்கத்தைக் கொண்டது இந்தப் போர்.

சமாதான முகமூடி அணிந்து, சமாதானத்தீர்வில் நம்பிக்கை கொண்டவர்போல நடித்து, சிங்கள மக்களையும் உலக சமூகத்தையும் ஏமாற்றி, ஆட்சிபீடம் ஏறினார் சந்திரிகா. அதிகாரபீடத்தில் அமர்ந்ததும் சமாதானப் பேச்சுவார்த்தை என்ற நாடகத்தை அரங்கேற்றினார். தமிழரின் தேசியப் பிரச்சினைக்கு சமாதான வழியில் தீர்வை வேண்டிய நாம் அவருக்கு நேசக்கரம் நீட்டினோம்.

சுமூகமாகப் பேச்சுக்களை நகர்த்தும் நோக்கில் போர்க் கைதிகளை விடுவித்து நல்லெண்ண சமிக்கைகளைக் காட்டினோம். இந்தப் பேச்சுக்களின் போது நாம் எவ்வித கடுமையான நிபந்தனைகளையோ சிக்கலான கோரிக்கைகளையோ விடுக்கவில்லை. தமிழ்மக்கள் மீது அநீதியான முறையில் திணிக்கப்பட்டிருந்த பொருளாதாரப் போக்குவரத்துத் தடைகளை நீக்கி இயல்பான சூழ்நிலைகளைத் தோற்றுவிக்கும்படியே நாம் சந்திரிகா அரசிடம் வேண்டினோம். அடிப்படைவசதிகள் இன்றி, அத்தியாவசியத் தேவைகள் மறுக்கப்பட்டு, பல வருடங்களாக இடர்பட்டு வாழ்ந்த எமது மக்களின் துன்பத்தைத் துடைத்து விடும்படியே நாம் கோரினோம். ஆனால் சந்திரிகா அரசு இந்த அற்ப சலுகைகளைத்தானும் தமிழருக்கு வழங்கத் தயாராக இல்லை. ஆறு மாதங்கள் வரை அர்த்தமின்றிப் பேச்சுக்கள் இழுபட்ட பொழுது நாம் ஓர் உண்மையைப் புரிந்து கொள்ள முடிந்தது. அதாவது சந்திரிகா அரசு சமாதானத்தை விரும்பவில்லை என்பதையும் சமாதான வழிமூலம் தீர்வை விரும்பவில்லை என்பதையும் நாம் உணர்ந்து கொண்டோம். சமாதானப் பேச்சுக்களின் போது இராணுவ நலன்களுக்கு மட்டுமே முன்னுரிமை கொடுக்கப்பட்டதைக் கண்டபோது சந்திரிகா அரசு இராணுவத் தீர்விலேயே தீவிர அக்கறை கொண்டிருந்தது என்பது எமக்குத் தெளிவுறப் புலனாகியது.

# அரசின் தந்திரோபாயத்திற்கு மக்கள் இடம்பெயர்வு மூலம் சாவுமணி!

பெரிய எடுப்பில் யாழ்ப்பாணம் மீது நிகழ்த்தப்படும் படையெடுப்பானது சந்திரிகா அரசின் இராணுவ, அரசியல் குறிக்கோளை தெட்டத் தெளிவாகக் காட்டுகிறது. தமிழ் மக்கள் செறிந்து வாழும் தமிழர் தாயகத்தின் மையப்பகுதியைச் சுற்றிவளைத்து, மக்களோடு சேர்த்து மண்ணையும் ஆக்கிரமித்து, யாழ்ப்பாணச் சமூகத்தை விடுதலை செய்துவிட்டதாக உலகுக்குக் காட்டும் கபட நோக்குடன் இப்படையெடுப்பு நிகழ்த்தப்பட்டது.

ஆயினும் யாழ்நகரையும் வலிகாமப் பகுதியையும் இராணுவம் முற்றுகையிடுவதற்கு முன்னராக மக்கள் அனைவரும் ஒட்டு மொத்தமாக இடம்பெயர்ந்து சென்ற வரலாற்று நிகழ்வானது சந்திரிகா அரசின் தந்திரோபாயத்திற்கு சாவு மணி அடித்தது. அரசின் போர் நடவடிக்கையையும் அதற்கு அரசு கற்பிக்கும் அபத்தமான காரணத்தையும் யாழ்ப்பாணத் தமிழ் மக்கள் ஏகமனதாக நிராகரித்து விட்டனர் என்பதையே இந்த இடம்பெயர்வு நிகழ்வு எடுத்துக் காட்டியது. சிங்கள அரச நிர்வாகத்தின் கீழ் அடிமைப்பட்டு வாழத் தமிழ் மக்கள் இனித் தயாராக இல்லை என்பதையும், மக்களையும் புலிகளையும் வேறுபடுத்த முடியாது என்பதையும் இந்த சனப்பெயர்வானது சிங்கள தேசத்திற்கும் உலகத்தாருக்கும் நன்கு உணர்த்தியது. எனவே யாழ்ப்பாணப் படையெடுப்பின் அரசியற்குறிக்கோளை அடைவதில் சந்திரிகா அரசு தோல்வியையே சந்தித்திருக்கிறது.

## மக்களின் துயரம் எம் நெஞ்சைப் பிளக்கின்றது; ஆனால்

# துன்பங்களை ஏற்று நமது மக்கள் விடுதலை எழுச்சிக்கு பங்களித்தனர்

இராணுவ முற்றுகையிலிருந்தும் அதன் பின்னணியிலுள்ள அரசியற் பொறியிலிருந்தும் எமது மக்கள் பாதுகாப்பாக தப்பித்துக் கொண்டமை ஒரு புறத்தில் எமக்கு ஆறுதலைத் தந்தபோதும், மறுபுறத்தில் இந்தப் பாரிய இடம்பெயர்வால் எமது மக்கள் அனுபவித்த — அனுபவித்து வரும் — இடர்களும், துயர்களும், துன்பங்களும் எமக்கு ஆழமான வேதனையைத் தருகின்றன. காலங்காலமாக வசித்த பாரம்பரிய மண்ணைத் துறந்து வீடு, காணி, சொத்துக்களைக் கைவிட்டு, ஏதிலிகளாக இடம்பெயர்ந்து எமது மக்கள் எதிர்கொள்ளும் தாங்கொணாத் துன்பங்கள் எமது நெஞ்சத்தைப் பிளக்கின்றன. எனினும் இத்துன்பியல் அனுபவமும் துயரமும் நிறைந்த அவலமும் எமது இனத்தின் விடுதலை எழுச்சிக்கு எமது மக்கள் அளித்த மாபெரும் பங்களிப்பாக வே நாம் கருதுகிறோம். ஆக்கிரமிப்பாளனுக்கு அடிபணிந்து போகாமல், சுதந்திர மனிதர்களாக சுயகௌரவத்துடன் வாழ்வதற்கு எத்தகைய துயரையும் எதிர்கொள்ள எமது மக்கள் துணிந்து நிற்கிறார்கள் என்பதையே இந்த இடம்பெயர்வு உலகத்துக்கு பறைசாற்றி நிற்கிறது.

மக்கள் வெளியேறிய நிலையில் இடிபாடுகளுடன் சுடுகாடாய்க் கிடக்கும் யாழ்ப்பாணத்தில் சிங்கள இராணுவப் பேய்கள் வெற்றிக்கொடியைப் பறக்கவிடலாம். தமிழரின் இராச்சியத்தைக் கைப்பற்றி விட்டதாக நினைத்து தென்னிலங்கையில் சிங்களப் பேரினவாதக் கும்பல்கள் பட்டாசுகள் கொளுத்திக் குதூகலிக்கலாம். இராணுவ மேலாதிக்க நிலையை எட்டிவிட்டதாக எண்ணி சந்திரிகா அரசு சமாதானப் பேச்சுக்கான சமிக்கைகளையும் விடலாம்.

# ஆக்கிரமிப்பு மூலம் தீர்வுகாண முயலும் சந்திரிகாவின் அரசியல் அசட்டுத்தனம்

இந்த சந்தர்ப்பத்தில் நாம் ஒன்றைத் தெட்டத்தெளிவாக எடுத்தியம்ப விரும்புகிறோம். அதாவது யாழ்ப்பாண மண்ணை சிங்கள இராணுவம் ஆக்கிரமித்து நிற்கும் வரை சமாதானத்தின் கதவுகள் இறுக்கமாக மூடப்பட்டிருக்கும். இராணுவ அழுத்தத்திற்குப் பணிந்து துப்பாக்கி முனையில் திணிக்கப்படும் சமரசப் பேச்சுக்களில் விடுதலைப் புலிகள் இயக்கம் ஒருபொழுதும் பங்குபற்றப் போவதில்லை. இதுதான் சந்திரிகா அரசிற்கு நாம் விடுக்கும் செய்தி. பாரிய இராணுவப் படையெடுப்பை முடுக்கிவிட்டு, பல லட்சம் மக்களை இடம்பெயரச் செய்து, வரலாற்றுப்பெருமை மிக்க யாழ். மண்ணை ஆக்கிரமிப்பதன் மூலம் சமாதான சூழ்நிலையும் சமரசத்தீர்வும் ஏற்பட்டுவிடும் என சந்திரிகா அரசு எண்ணுமானால் அதைப்போல அரசியல் அசட்டுத்தனம் வேறெதுவும் இருக்க முடியாது.

(5 ஆம் பக்கம் பார்க்க)

# மரண அறிவித்தல்கள்

## முருகேசு வேலுப்பிள்ளை

கல்வியங்காடு ஆடியபாதம் வீதியை வசிப்பிடமாக கொண்டவரும், உத்திராவத்தை புலோலி வடகிழக்கில் தற்காலிகாக வசித்து வந்தவருமாகிய முருகேசு வேலுப்பிள்ளை காலமாகிவிட்டார்.

இவர் இராசம்மாவின் அன்புக் கணவரும், செல்வராஜா (கோப்பாய் வடக்கு), இரகுலராஜா (பிரான்ஸ்), வசந்தி (பிரான்ஸ்), வனஜா (கல்வியங்காடு), கலாதாசன் (பிரான்ஸ்) ஆகியோரது அன்புத் தந்தையும், சிவபாலசுப்பிரமணியம், சரசுவதி, இரஞ்சினி, டெய்சி ஆகியோரது அன்பு மாமனாரும், சுகன்யா, சஜீவன், சுஜிந்தா, ஜெயரூபன், ஜெனா, லின்டாலி, லக்ஷா, லின்சாலி ஆகியோரது பேரனும், செல்லம்மா, இராசையா, கந்தசாமி ஆகியோரது அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரது தகனக்கிரியைகள் இன்று (28-11-95) பிற்பகல் 1-00 மணியளவில் ஆனைவிழுந்தான் மயானத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்;
வே. செல்வராஜா
(மகன்)

தற்காலிக முகவரி;
திரு. மு. கணபதிப்பிள்ளை,
உத்திராவத்தை,
புலோலி வடகிழக்கு,
பருத்தித்துறை.

(39398)

## சி. பாலசுப்பிரமணியம்

(ஓய்வு பெற்ற கணித விரிவுரையாளர், யா/தொழில் நுட்பக் கல்லூரி)

வயாவிளானைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம் தெற்கையும் மட்டுவில் தெற்கையும் வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியம் அவர்கள் (27-11-95) திங்கட்கிழமை காலை இயற்கை எய்திவிட்டார்.

இவர் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் திருமதி. ஜெ. சசிகலா (ஜேர்மனி), திருமதி. உ. கலைவாணி (ஜேர்மனி), செல்வி. கலையரசி (யாழ். தொழில் நுட்பக் கல்லூரி H N. D. A. மாணவி), எழிலினி, திருமாவளவன் (ஸ்கந்தவரோதயாக் கல்லூரி உயர்தர மாணவன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயந்திரன் (ஜேர்மனி), உதயமூர்த்தி (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும், நிர்சிகாவின் அன்புப் பேரனும், செல்வராசாவின் (ஜேர்மனி) பாசமிகு சகோதரனும், சுன்னாகம் முன்னாள் திருமகள் அழுத்தக அச்சமைப்பாளர் செ. சின்னத்துரையின் அன்பு மருமகனும், துரைராஜா இராஜேஸ்வரி (ஜேர்மனி), சீவரத்தினம் புவனேஸ்வரி (பிரான்ஸ்), செல்வி. கமலேஸ்வரி (தெல்/துர்க்காதேவி தேவஸ்தான பணியாளர்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (28-11-95) பி. ப. 3. 00 மணிக்கு மட்டுவில் உலகப்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், அன்பர் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திரு. செ. சின்னத்துரை
(மாமன்)

C/o M. S. குணரத்தினம்
(ஓய்வு பெற்ற S. M.)
வேதக்கேணி றோட்,
மட்டுவில் தெற்கு, மட்டுவில்.

(3929?)

## கதிரவேலு ஆறுமுகம்

புங்குடுதீவு 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், பாண்டியன்தாழ்வை வசிப்பிடமாகவும் கொண்ட க. ஆறுமுகம் நேற்று (27 - 11 - 95) காலமானார்.

இவர் புங்குடுதீவு கதிரவேலு - சின்னாச்சி தம்பதிகளின் அன்பு மகனும், அமராவதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சுந்தரலிங்கம் (நயினாதீவு), இராசலிங்கம், சாந்தலிங்கம் (வர்த்தகர், கொய்யாத்தோட்டம்), சண்முகலிங்கம், பஞ்சலிங்கம், அமிர்தலிங்கம் ஆகியோரின் அன்புத் தந்தையும், கனகலட்சுமி, செல்வராணி, புஷ்பராணி, தர்ஷனி, பூபா, திருமதி பஞ்சலிங்கம், லீலா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலம்சென்ற கந்தையா (செட்டிக்குளம்), பருவதம், செல்லம்மா, கண்ணம்மா, சின்னம்மா, சம்பிப்பிள்ளை, சின்னத்தங்கச்சி, பிள்ளையம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், நயினாதீவு முருகேசு - சேதுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற நாகம்மா (வட்டக்கச்சி), பார்வதி (நயினாதீவு) மருதடியான், அன்னப்பிள்ளை ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 28-11-95 செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சாந்தலிங்கம்
(மகன்)

தற்போதைய முகவரி:
மே/பா, நல்லதம்பி புவனேசன்,
முதலாம் கட்டை ஒழுங்கை,
பெருங்குளம் வீதி,
கல்வயல்,
சாவகச்சேரி.

(39402)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளாலியில் வயோதிபர் சடலம்

தென்மராட்சி, நவ. 28

கிளாலி இறங்கு துறைக்கு அருகில் உள்ள தென்னந் தோட்டமொன்றில் இறந்த நிலையில் காணப்பட்ட 60 வயது மதிக்கத்தக்க வயோதிபர் ஒருவரின் சடலம் அடையாளம் காண்பதற்காக கிளாலி காவல் துறையினரால் பளை வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சாரமும் வெள்ளை சேர்ட்டும் அணிந்துள்ள இவ் வயோதிபர் கிளாலியூடாக கிளிநொச்சி செல்வதற்கு அங்கு வந்திருக்கலாமென நம்பப்படுகிறது. (ஐ-117)

# காசோலையாக ஆசிரியர் சம்பளம் வழங்கப்பட்டது குறித்து கண்டனம்

### கல்விப்பணிப்பாளர்கள் மீது பாய்கிறது தமிழர் ஆசிரியர் சங்கம்

யாழ்ப்பாணம், நவ. 28

யாழ். மாவட்ட ஆசிரியர்களின் நவம்பர் மாதச் சம்பளத்தை காசாக வழங்காமல் காசோலையாக வழங்கி விட்டு —

பணிப்பாளர்களுக்கும், கல்வித் திணைக்கள ஊழியர்களுக்கும் நவம்பர் மாதச் சம்பளத்தை காசாக வழங்குவதற்கு முயலும் செயலை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் க. மகாசிவம் இவ்வாறு தெரிவிக்கும் கண்டன அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறார்.

அந்த அறிக்கையில் அவர் தெரிவித்துள்ள விடயங்கள் வருமாறு:-

ஆசிரியர் சம்பளக் கொடுப்பனவு குறித்து எமது சங்கம் அரச அதிபருடன் தொடர்பு கொண்ட போது —

திணைக்களத் தலைவர் வவுனியாவுக்குச் சென்றால் ஆசிரியர் சம்பளக் காசை திரவப் பணமாகக் கொண்டு வர முடியும் என்றும் —

இதற்கு ஏற்கனவே அரசு அனுமதி வழங்கியுள்ளது என்றும் தெரிவித்திருந்தார்.

இந்தத் தகவலை சங்கம் இரு வலயங்களினதும் கல்விப் பணிப்பாளர்களின் கவனத்துக்குக் கொண்டு வந்தது.

பல ஆசிரியர்கள் தமக்கு ஒக்டோபர் மாதத்திற்கு வழங்கிய சம்பளக் காசோலைகளைக் கூட இன்னும் மாற்ற முடியாத நிலையில் உள்ளனர் என்பதையும் —

வங்கிகள் இயங்கவில்லை என்பதையும் —

இயங்கினாலும் திரவப் பணம் வங்கிகளில் போதியளவு இல்லை என்பதையும் —

எனவே இடம்பெயர்ந்து அகதிகளாகியிருக்கும் ஆசிரியர்களுக்கு இம்மாதச் சம்பளத்தையும் காசோலையாக வழங்கினால் அவர்கள் மேலும் சிரமத்துக்கு உள்ளாவார்கள் என்பதையும் —

சங்கப் பிரதிநிதிகள், பணிப்பாளர்கள் இருவரையும் சந்தித்து அவர்களுக்குத் தெரிவித்தது.

எனவே அரச அதிபருடன் தொடர்பு கொண்டு வவுனியா சென்று திரவப் பணத்தை எடுத்து வந்து சம்பளமாக விநியோகிக்கும்படியும் சங்கம் கோரியிருந்தது.

இதற்கு அரச அதிபருடன் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்த வலயக் கல்விப் பணிப்பாளர்கள் —

ஏறக்குறைய 10 நாள்கள் எதுவித ஆக்கபூர்வ நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாது தாமதித்து விட்டு —

கட்டு நிதி உரிய நேரத்தில் வந்த போதும் — பத்து நாள்கள் தாமதித்து ஆசிரியர்களுக்கு சம்பளத்தை காசோலையாக வழங்குவது எனத் தீர்மானித்துள்ளனர்.

இந்நிலையில் —

பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், திணைக்களத்தின் ஏனைய ஊழியர்கள் ஆகியோருக்கு இம்மாதச் சம்பளத்தை காசாக வழங்க வலயக் கல்விப் பணிப்பாளர்களும் கணக்காளரும் நடவடிக்கை எடுத்துள்ளனர். இது அதிபர்கள், ஆசிரியர்கள் மீது பாரபட்சம் காட்டும் ஒரு நடவடிக்கையாகும். அதனால் இதனைக் கண்டிக்கிறோம்.

பணிப்பாளர்களை சங்கத்தின் பொதுச் செயலாளர் இது தொடர்பாக முன்னர் கலந்துரையாடியபோது இவ் விடயத்திற்காக பணிப்பாளருடன் கூட வவுனியாவுக்கு வருவதற்கு தாமும் தயார் என்று சம்மதம் தெரிவித்திருந்தார்.

இதற்கான உதவிகள் அனைத்தையும் வழங்குவதாக யாழ். அரச அதிபரும் உறுதியளித்திருந்தார்.

தம்முடன் யாராவது ஒரு வலயக் கல்விப் பணிப்பாளர் வந்தால் திரவப் பணத்தை வவுனியாவில் இருந்து பெற்றுக் கொடுக்க தம்மாலான சகல உதவிகளையும் செய்யத்தயார் என்று வவுனியா கல்விப் பணிப்பாளர் உறுதியளித்திருந்தார்.

ஆனால்—

யாழ் மாவட்டத்தில் உள்ள ஏனைய சகல அரச ஊழியர்களும் தமது இம்மாதச் சம்பளத்தைக் காசாகப் பெற—

அதிபர்கள் ஆசிரியர்கள் மட்டும் தமது இம்மாதச் சம்பளத்தை காசோலையாகப் பெறும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதற்குக் காரணம் கல்விப் பணிப்பாளர்களின் பொறுப்புணர்ச்சியில்லாத தன்மையும்' நிர்வாக அக்கறையின்மையும், அதிபர்கள், ஆசிரியர்கள மீது அக்கறை இல்லாத போக்குமே காரணம் ஆகும்.

— இவ்வாறு திரு. மகாசிவம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டிருந்தது. (உ)

## மண்மீட்புப் போரில் ஆசிரியர், தபால் ஊழியர்

மருதங்கேணியில் உள்ள தாளையடியில் ஆசிரியர்ஒருவரும் தபால் ஊழியர் ஒருவரும் மண்மீட்புப் போரில் தம்மை இணைத்துக்கொண்டுள்ளனர்

தாளையடி றோ. க. தமிழ் கலவன் பாடசாலையைச் சேர்ந்த ஆசிரியரான கு. சனத் (வயது 25) மற்றும் தாளையடிப் பகுதி தபால் ஊழியரான யோ. ஜெகநாதன் (வயது 23) ஆகியோரே தம்மை மண்மீட்புப் போராட்டத்தில் இணைத்துக்கொண்டவர்கள் ஆவர்.

கடந்த 26 ஆம் திகதி புதிய போராளிகள் இணையும் செயலகத்தில் வந்து இவர்கள் தம்மை இணைத்துக் கொண்டனர். (இ- 36)

## படையினர் நிலை மீது கிழக்கில் தாக்குதல்

### சிப்பாய் பலி; மூவர் காயம்

கொழும்பு, நவ. 28

வாழைச்சேனைக்கு தென் மேற்கே இரண்டு கிலோ மீற்றர் தொலைவில் உள்ள மீராவோடையில் பாதுகாப்புப் படையினரின் நிலை ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

அங்கு நடந்த சண்டையில் படைச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டதாகவும், அதிகாரி ஒருவர் உட்பட மூவர் படுகாயமடைந்ததாகவும் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்தது.

காயமடைந்த படையினர் பொலனறுவை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். (உ-ஐ)

### இடம்பெயர்ந்தோர் அவலங்கள்:

## சந்திரிகாவைச் சந்தித்து யாழ். ஆயர் விளக்குவார்

யாழ். ஆயர் அதி. வண. தோமஸ் சௌந்தரநாயகம் நேற்று கொழும்பில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவைச் சந்தித்துப் பேசவிருந்தார்.

அப்போது, வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்துள்ள லட்சக்கணக்கான மக்கள் அனுபவிக்கும் கஷ்டங்களை அவர் ஜனாதிபதிக்கு எடுத்து விளக்குவார் என்று எதிர் பார்க்கப்பட்டது.

ஜனாதிபதியை கடந்த வாரம் சந்திப்பதற்கு ஆயர் சந்தர்ப்பம் கேட்டபோது—

யாழ். நகரை துருப்புகள் கைப்பற்றியபின் சந்திப்பதற்கு நேரம் ஒதுக்குவதாக தெரிவித்து ஜனாதிபதி செயலகத்தால் நேற்றைய திகதி யாழ். ஆயருக்கு வழங்கப் பட்டதாம்.

இதனைத் தொடர்ந்து கடந்த சனியன்று சாவகச்சேரியில் இருந்து யாழ். ஆயர் கொழும்பு புறப்பட்டுச் சென்றார். (உ-3)

### யாழ்ப்பாண மக்கள்

## சொந்த இடங்களுக்கு திரும்பி வாழவேண்டும்

### சந்திரிகாவின் விருப்பம் இதுவாம்

யாழ்ப்பாண மக்கள் தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பி பாதுகாப்பாகவும் வசதிகளுடனும் வாழ வேண்டும் என்பதே எனது விருப்பமாகும்.''

ஞாயிறன்று வெளியான ''சண்டே ஒப்சேவர்'' பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

யாழ்ப்பாணத்திலும் ஏனைய இடங்களிலும் மக்கள் இயல்பான வாழ்க்கை நடத்துவதற்கு இயன்ற அனைத்தையும் தமது அரசு செய்யும் என்றும் சந்திரிகா கூறியிருக்கிறார்.

குடாநாட்டில் மீண்டும் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தி, மின்சாரம், உணவு விநியோகம் ஆகியவசதிகளை அளிக்க ஏற்கனவே செயற்குழு ஒன்று நியமிக்கப்பட்டிருப்பதாகவும் —

வீதிகள் செப்பனிடப்பட்டு கட்டடங்கள் மீண்டும் கட்டப்பட்டு இதர வசதிகள் சீர்செய்யப்படும் என்றும் —

ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார்.

இடம்பெயர்ந்த மக்கள் குறித்து தமது கவலையை வெளியிட்டுள்ள சந்திரிகா குமாரதுங்கா விடுதலைப் புலிகள் விருப்பப்படி மக்கள் நடப்பதை தாம் அனுமதிக்கப்போவதில்லை என்றும் தெரிவித்திருக்கிறார். [உ-ஐ)

## யாழ். போதனாவைத்திய சாலையை முழுமையாக இயங்கவைக்க முயற்சி

யாழ்ப்பாணம், நவ. 28

மந்திகை அரசினர் வைத்திய சாலையில் தற்போது தற்காலிகமாக ஒருபகுதியாக இயங்கிவரும் யாழ். போதனா வைத்தியசாலையை முழுமையாக இயங்கவைப்பதற்கான ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டுவருகின்றன.

புலோலி மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் இவ்வைத்திய சாலையின் ஒருபகுதி இயங்க வைக்கப்படவுள்ளது.

முன்ஏற்பாடாக வைத்திய சாலையின் ஊழியர் மேற்பார்வையாளர் அலுவலகம் நேற்றுமுதல் அங்கு இயங்க ஆரம்பித்துள்ளது.

மேலும் இவ்வளவு நாள்களும் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் பணியாற்றி வந்த தற்காலிக ஊழியர்கள் அனைவரும் மந்திகையில் பணியாற்ற நிர்வாகத்தால் அழைக்கப்பட்டு நேற்று முதல் அங்கு கடமை புரியவும் ஆரம்பித்தனர்.

புலோலி மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் வைத்திய நோயாளர் விடுதியும், கிளினிக்குகளும் இயங்கவைக்கப் பட உள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-15-173-117)

## பருத்தித்துறை அதிபர்கள் ஆசிரியருக்கு

பருத்தித்துறை கல்விக் கோட்ட அதிபர்கள், ஆசிரியர்களை கிராமக்கோட்டுக்கு அருகாமையிலுள்ள மணியம் கல்வி நிலையத்துக்கு இன்று 28 ஆம் திகதி காலை 9.00 மணியளவில் ஒன்று கூடுமாறு பருத்தித்துறைப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (இ-118)

## சுகாதார பயிற்சி வகுப்பு

பளைப் பிரிவில் உள்ள நலனோம்பு நிலையங்களில் சேவையாற்றும் தொண்டர்களுக்கான சுகாதார பயிற்சி வகுப்பு நாளை 29 ஆம் திகதி புதன்கிழமை பளை, பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் புனர்வாழ்வுக் கழக மண்டபத்தில் நடைபெறும். (இ-117)

## போருக்கு போவென்று சொல்லம்மா....

மகன்:

போருக்கு போவென்று சொல்லம்மா — என்னை
பேருக்கு பெற்றதில் என்னம்மா?
வீரனாய் அனுப்பிவிடு என்னை — இல்லை
வீண்பழிகள் சூழ்ந்து விடும் உன்னை.

பள்ளியிற் படித்தோமே நாமன்று — வீரத்
தமிழ்த்தாய்கள் வாழ்ந்தார்கள் என்று.

தாய்:

அந்தவழி வந்தவள்தான் நான் மகனே — உன்னை
அனுப்புகிறேன் சந்ததியைக் காமகனே.

வீட்டுக்கு ஒருபிள்ளை யினிப்போதும் — மிகுதி
நாட்டுக்காய் பகையோடு யெதிர்மோதும்
தலைவன்பேர் நினையுங்கள் வரும்வீரம் — உடனே
செய்யுங்கள் எதிரியைச் சங்காரம்.

மகன்:

உலகந்தான் இரண்டாகப் போனாலும் — அம்மா
ஈழம்தான் அதில்பாதி ஆனாலும்
மீளாமல் வேங்கையென வருவோமா — ஈழம்
ஆளாமல் தமிழனென வாழ்வோமா?

தாய்:

எம்தலைவன் வரலாற்றுப் பதிவேட்டில் — மக்காள்
பெயர்களைப் பதியுங்கள் முதலேட்டில்
நாளைவரும் சந்ததிகள் அதைப்பார்க்கும் — அப்போ
முலைதந்த தாயெனக்கும் பேர்சிறக்கும்.

— கோ. கோணேஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தலைநகரில் பதற்றம் ஏற்பட்டது:

# கொழும்பில் நேற்று பெரும் குண்டு சத்தம்

## பொலீஸ் பயிற்சி நடவடிக்கை என பின்னர் அறிவிப்பு

கொழும்பு, நவ. 28

நேற்றுப் பிற்பகல் கொழும்பில் அடுத்தடுத்துக் கேட்ட பெரும் குண்டு வெடிப்புச் சத்தத்தால் தலைநகரில் பெரும் பதற்றம் ஏற்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது.

குண்டு வெடிப்புக்கான காரணம் உடனடியாகத் தெரிய வரவில்லை.

ஆனால் பானடுவ பொலீஸ் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி நடவடிக்கைகளின் போது இரண்டு குண்டுகள் வெடிக்க வைத்து செயலிழக்கச் செய்யப்பட்டதாகவும்—

அக்குண்டுகளின் சத்தத்தாலேயே கொழும்பு நகரமும் அதன் சுற்றாடல் பகுதியும் அதிர்ந்தன என்றும்—

பாதுகாப்பு அதிகாரிகள் நேற்று மாலை அறிவித்தனர்.

இதேவேளை பயிற்சி நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெறும் என்றும்—

அதனால் அவ்வப்போது இதுபோன்ற குண்டு வெடிப்புச் சத்தங்கள் கேட்கும் என்றும்—

எனவே அத்தகைய சத்தங்கள் காரணமாக பொதுமக்கள் பதற்றம் அடையத் தேவையில்லை என்றும்—

சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் ஹென்றி பெரேரா தெரிவித்தார். (உ-3)

## தபால் பெறும் இடங்கள்

தென்மராட்சி, நவ. 28

குமண கப்பலில் கொண்டு வரப்பட்ட தபால்களில் வலிகாமம் பகுதி மக்களுக்கான தபால்களை விநியோகம் செய்யும் நடவடிக்கைகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டன.

கோப்பாய், நீர்வேலி, சங்கானை, பண்டத்தரிப்பு, உரும்பிராய் அஞ்சல் அலுவலகத் தபால்களை சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும்—

சண்டிலிப்பாய், யாழ்ப்பாணம், சுழிபுரம், காரைநகர் அஞ்சல் அலுவலகத் தபால்களை சாவகச்சேரி மகளிர் கல்லூரியிலும் —

சுன்னாகம், மல்லாகம், ஏழாலை அஞ்சல் அலுவலகத் தபால்களை பருத்தித்துறை வீதி, சரசாலை வடக்கிலும் -

அச்சுவேலி, புத்தூர் அஞ்சல் அலுவலகத் தபால்களை வரணி உப தபால் நிலையத்திலும் —

ஆனைக்கோட்டை அஞ்சல் அலுவலகத் தபால்களை கொடிகாமம் சந்தியில் உள்ள கட்டடத்திலும் பெற்றுக் கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-117)

### சாவகச்சேரி ஆஸ்பத்திரியில்

# தொடர்ந்து கடமையாற்ற ஊழியர்களுக்கு அனுமதி

சாவகச்சேரி, நவ. 28

சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையில் பணிபுரிந்த யாழ். போதனா வைத்தியசாலை ஊழியர்கள் தொடர்ந்து அங்கு பணி புரிய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

யாழ். ஆஸ்பத்திரி, மந்திகையில் இயங்கிய போதும்—

தென்மராட்சியில் தங்கியுள்ள ஊழியர்கள் சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையில் பணியாற்ற அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

ஆனால்திடீரென கிடைத்த உத்தரவுப்படி சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் பணிபுரிந்த யாழ். போதனா வைத்தியசாலை ஊழியர்களை மந்திகையில் உள்ள யாழ். ஆஸ்பத்திரியில் கடமைக்கு சமுகமளிக்குமாறு வைத்தியசாலை நிர்வாகம் கோரியிருந்தது

இதனையடுத்து தமது பிரச்சினை குறித்து அவர்கள் ஆஸ்பத்திரி நிர்வாகத்துக்கு விளக்கமளித்தனர் என்றும் —

அதையடுத்தே தொடர்ந்து சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் பணியாற்ற அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது என்றும் தெரியவந்தது.

அதேவேளை —

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் பணிபுரியும் சமயா சமய சிற்றூழியர்களில் 10 பேரை மந்திகையில் இயங்கும் யாழ். ஆஸ்பத்திரிக்கு சமுகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளது. (உ-3)

## சீருடையுடன் கடமையாற்ற ஊழியருக்குப் பணிப்பு

சாவகச்சேரி, நவ. 28

சாவகச்சேரியில் பணிபுரியும் யாழ். ஆஸ்பத்திரி சிற்றூழியர்கள் தமக்குரிய சீருடைகளை அணியவேண்டும் என்று நேற்று பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ். ஆஸ்பத்திரியில் பணிபுரிந்தபோது அணிந்த சீருடைகளை இங்கும் அணிந்து பணிபுரிய வேண்டும் என அவர்கள் கோரப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து அவரசமாக வெளியேறியதால் இவர்களில் பலர் தமது சீருடைகளை விட்டு விட்டு வந்துள்ளனர் என்று கூறப்படுகிறது. (இ-3)

---

### தற்காலிக இறைச்சிக்கடை உரிமையாளர்களுக்கு

## ஓர் அறிவித்தல்

இடம் பெயர்ந்து சாவகச்சேரி நகரசபை, சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குள் தற்காலிகமாக இறைச்சிக்கடை அமைத்து வியாபாரம் செய்து கொண்டிருக்கும் அல்லது செய்ய இருக்கும் நபர்கள் சாவகச்சேரி நகரசபை அலுவலகத்தில் 29-11-95 புதன்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு நடைபெற இருக்கும் கூட்டத்தில் தவறாது பங்குபற்றும்படி கேட்கப்படுகின்றனர்

இக்கூட்டத்தின் முடிவுகள் 01-12-95 தொடக்கம் நடைமுறைக்கு வரும். இதனை அனுசரியாது இறைச்சி வியாபாரம் செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

சி. நடராஜா
செயலாளர்,
நகரசபை, சாவகச்சேரி.

27-11-95
சி-3110

---

## உடன் சந்திக்கவும்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையைச் சேர்ந்த உப அதிபர், விரிவுரையாளர்கள், அலுவலக ஊழியர்கள், சிற்றூழியர்கள் அனைவரையும் 29-11-95 (புதன்கிழமை) சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் அமைந்துள்ள சாவகச்சேரி கோட்ட அலுவலகத்தில் காலை 9 மணிக்கு தவறாது சந்திக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதிபர்

(39290)

---

### அஞ்சல் தொலைத் தொடர்பு இளைப்பாறிய சேவையாளர்

## நலன்புரிக் கழகம்

தற்பொழுது நிலவி வரும் சூழ்நிலை காரணமாக மேற்படி கழகம் கீழ்குறிப்பிடப்படும் முகவரியில் தற்காலிகமாக இயங்குகிறது என்பதை சகல அங்கத்தவர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

— தலைவர்

கோ. தியாகராஜா,
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ். கிளை, வி. எம். வீதி,
பருத்தித்துறை.

(39397)

---

## சம்பளக் கொடுப்பனவு

யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி,
யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி

என்பனவற்றுக்கான கொடுப்பனவுகள் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் 29-11-95 (புதன்) காலை 10 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபரினால் வழங்கப்படும்.

— அதிபர்

(39396)

---

### ★ வடக்கிலிருந்து செல்வோர்

# வவுனியாவில் கட்டாயம் 3 நாள் தங்க வேண்டும்!

## புதிய உத்தரவு நடைமுறைக்கு வருகிறது

கொழும்பு, நவ. 28

வடக்கிலிருந்து வெளி மாவட்டங்களுக்கு செல்லும் யாழ். வாசிகள் வவுனியா நலன்புரி நிலையத்தில் மூன்று தினங்கள் தங்க வேண்டும் என்று பணிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தை சேர்ந்தவர்கள் வவுனியா வந்தவுடன் வெளியிடங்களுக்கு செல்ல முடியாது.

வவுனியா தற்காலிக நலன்புரி நிலையத்தில் குறைந்தது 72 மணித்தியாலங்கள் தங்கியிருக்க வேண்டும் என்று உத்தரவிட முடிவு செய்யப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்து வவுனியா வரும் யாழ். மக்கள் தாம் செல்லும் இடத்தின் விவரத்தை வவுனியா நலன்புரி நிலையத்தில் உள்ள பாதுகாப்புப் படை அதிகாரிகளுக்கு தெரிவிக்க வேண்டும்.

அவர்கள் அந்த உரிய இடத்துடன் தொடர்பு கொண்டு விசாரித்த பின்னரே குறிப்பிட்ட நபர் செல்ல அனுமதிக்கப்படுவார்.

— இவ்வாறு கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்துள்ளன. (உ-3)

## வருவாய்பகுதி செயலகம் வருமாறு அறிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 28

வலிகாமம் பகுதியைச் சேர்ந்த பின்வருவோரை சாவகச்சேரி கச்சாய் வீதியில் அமைந்துள்ள தென்மராட்சிக் கோட்ட வருவாய்ப் பகுதிச் செயலகத்துக்கு எதிர்வரும் 30 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு வருகை தரும்படி வருவாய்ப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

★ முருகுப்பிள்ளை ரதிவீர குலரத்தினம், வட்டு. கிழக்கு, சித்தன்கேணி.

★ செல்லையா இராசேந்திரம், ஞானவைரவர் கோவில் வீதி, உரும்பராய்.

★ செல்வி ஜெயராதா கந்தசாமி, அராலி தெற்கு, வட்டுக்கோட்டை.

★ மாணிக்கம் நாகேக, கோமதி வீதி, கற்குழி லேன், அராலி தெற்கு.

★ பொன்னம்பலம் கனகரத்தினம், 441, கண்டி சாலை, அரியாலை.

★ சின்னப்பிள்ளை ஆறுமுகம், மூளாய் வீதி, வட்டு. மேற்கு.

★ சுப்பிரமணியம் மாணிக்கம் (ஐக்கிய நாணய சங்கத் தலைவர்), கரைப்பிட்டி, பிள்ளையார் கோவிலடி, அராலி தெற்கு.

★ திருமதி இராசம்மா இரகுநாதன், 54, சிவரஞ்சினி வீதி, நாயன்மார்க்கட்டு, யாழ்ப்பாணம்.

★ குமாரசாமி வேலாயுதம் பிள்ளை, சங்கரத்தை வீதி, வட்டு. தென் மேற்கு.

★ துரையப்பா சிவபாலன், 10/A, முதலாம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

★ சுப்பிரமணியம் ஸ்ரீவிக்னேஸ்வரன், 10, சின்னக் கிணற்றடி ஒழுங்கை, அரியாலை, யாழ்ப்பாணம். (இ)

### தென்மராட்சிப்பிரிவு கூட்டத்தில்

## இடம்பெயர்ந்தோருக்கான வசதிகள் குறித்து ஆராய்வு

எழுதுமட்டுவாள், நவ. 28

வலிகாமம்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து தென்மராட்சிப் பிரிவில் தங்கியுள்ள மக்களின் முகாம் பராமரிப்பு. நிவாரணம் போன்ற பணிகளை மேற்கொள்ளும் பெருட்டு தென்மராட்சியில் அமைக்கப்பட்டுள்ள ஐந்து வலயங்களும் தமது செயற்பாட்டினை ஆரம்பித்துள்ளன

கொடிகாமம் பிரிவின் மேலதிக பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள திரு. க. சந்திரராசா தலைமையில் மிருசுவிலில் அமைந்துள்ள அதன் காரியாலயத்தில் நடைபெற்ற அபிவிருத்தி - புனர்வாழ்வு, நிவாரணம் பற்றிய கூட்டத்தில் அரச சார்பற்ற நிறுவனங்களை சேர்ந்த பல பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

கொடிகாமம் பிரிவின் 16 கிராமசேவையாளர்கள், அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், சிறுவர் பாதுகாப்பு நிதியம், தமிழர் புனர்வாழ்வுக் கழகம். கெயர் ஸ்தாபனம் ஆகியவற்றின் பிரதிநிதிகள், சுகாதார பரிசோதகர்கள் போன்றோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இடம்பெயர்ந்த மக்களின் சுகாதாரம், தண்ணீர் வசதி உணவு, பிள்ளைகளின் சத்துணவு ஆகியவற்றை வழங்குவது பற்றி கூட்டத்தில் ஆராயப்பட்டது. (இ- 152)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## சந்திரிகாவுக்கு

யாழ்ப்பாண மக்கள் தமது இல்லங்களுக்குத் திரும்பிச் சென்று இயல்பு வாழ்க்கையை மேற்கொள்ளவேண்டும்.

இவ்வாறு கேட்டிருக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா.

யாழ்ப்பாணத்தை — யாழ். நகரத்தை — கைப்பற்றிய பின்னரே சந்திரிகா இப்படி ஓர் அழைப்பை விடுப்பார் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் யாழ். நகருக்கான சண்டை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. விடுதலைப் புலிகள் படையினர் மீது கடுந்தாக்குதல் நடத்தி வருகின்றனர். அவற்றை எதிர்கொள்ள முடியாத நிலையிலும், புலிகளின் கையினால் பேரிழப்புகளைச் சந்தித்து வருவதாலும் படையினரின் முன்னேற்றம் மந்தகதி அடைந்துள்ளது.

யாழ். நகரிலும் வலிகாமத்தின் ஏனைய பகுதிகளிலும் இப்போது உருவாக்கப்பட்டுள்ள இராணுவ வேலிகளை ஊடறுத்து விடுதலைப் புலிகள் தாக்கும்போது துருப்புக்களால் நின்று பிடிக்க முடியுமா என்பது இனித்தான் தெரியவேண்டும்.

இத்தகைய அரை குறை நிலையில், இராணுவ வெற்றி இன்னும் நிச்சயமில்லாத நிலையில் யாழ்ப்பாணத்து மக்களை வலிகாமத்துக்கு திரும்பி வருமாறு சந்திரிகா கேட்பது, தனக்கு ஏற்பட்ட தோல்வியை — மக்கள் இல்லாத வெறும் நிலத்தையும், இடிபாடுண்ட கட்டடங்களையும் கைப்பற்றுவதால் ஏற்பட்ட தோல்வியை — விரைவில் மறைத்துவிடும் நோக்கத்துடனேயே.

ஆனால், வீதியைப்போட்டு, மின்சாரத்தை வழங்கிவிட்டால் வலிகாமம் மக்கள் அங்கு திரும்பிவிடுவார்கள் என்று எதிர்பார்ப்பது முற்றிலும் முட்டாள்தனமானதாகும்.

முன்னர் இருந்தது போல, பலாலி முகாமுக்குத் திரும்புமாறும், தமிழீழப் பகுதியை ஆக்கிரமிப்பதை நிரந்தரமாக நிறுத்துமாறும் இராணுவத்தினருக்கு உத்தரவிட்டு அதனை செயற்படுத்தினால் மட்டுமே வலிகாமம் மக்கள் தங்கள் பகுதிக்குத் திரும்ப முடியும்.

இராணுவம் தங்களைக் கொன்றொழிக்கும் அசுரன் என்பதால் தான் வலிகமம் மக்கள் சொந்த மண்ணை விட்டு இடம்பெயர்ந்தார்கள். ஆகவே அவர்கள் திரும்பிச் செல்வதற்கு அந்த அசுரன் தானாகப் பின்வாங்க வேண்டும்; இல்லையேல் அங்கிருந்து விரட்டப்படவேண்டும்.

வெறும் சோற்றுக்கும், வீதிக்கும், மின்சாரத்துக்கும் தமிழர்களை விலைக்கு வாங்கிவிடலாம் என்று சந்திரிகா நினைப்பாரானால் அவர் சமகாலப் போக்குத் தெரியாத கிணற்றுத் தவளையாவார்.

இராணுவத் தாக்குதல்களால் தமிழர்களைக் கொன்றொழிப்பதாலோ, இராணுவ பலத்தைக் காட்டி அச்சுறுத்துவதாலோ தமிழர்கள் தங்கள் விடுதலைக்கு — சுதந்திரத்துக்கு — விலைபேசமாட்டார்கள் என்பதனைச் சந்திரிகா உணர்ந்து கொள்ளட்டும். எதனை இழந்தேனும் விடுதலையை அடைந்துவிட வேண்டும் என்ற தமிழர்களின் மன உறுதியை அவர் தெரிந்து கொள்ளட்டும்.

தமது தோல்வியை மறைப்பதற்காகத் தமிழர்களை ஏமாற்றலாம் என்று சந்திரிகா நினைத்தால், அவர் தம்மைத் தாமே ஏமாற்றி தோல்வியை அரவணைத்துக் கொள்ளப் போகிறார் என்பதே ஆகும்.

(தலைவரின் உரை: தொடர்ச்சி)

### இந்த வரலாற்றுத் தவறால் சந்திரிகாவின் ஆட்சிப்பீடம்

# முழுத்தீவையுமே பெரியதொரு யுத்த நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது

இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கையானது சந்திரிகாவின் ஆட்சிப்பீடம் இழைத்த மாபெரும் வரலாற்றுத் தவறாகும். இதன் விளைவாக சமாதானத்திற்கான சகல பாதைகளையும் கொழும்பு அரசு மூடிவிட்டதுடன் முழுத்தீவையுமே பெரியதொரு யுத்த நெருக்கடிக்குள் தள்ளிவிட்டிருக்கிறது.

யாழ்ப்பாணச் சமரில் புலிகள் இயக்கம் பேரிழப்பைச் சந்தித்துவிட்டதென்றும், பலவீனப்பட்டு விட்டதென்றும் அரச பிரசார சாதனங்கள் உரிமை கொண்டாடுவதில் எவ்வித உண்மையும் இல்லை. இந்தச் சமரில் புலிகள் பலவீனப்படவுமில்லை; பெரிய உயிரிழப்பைச் சந்திக்கவுமில்லை. யாழ்ப்பாணச் சமரில் புலிகளை விட இராணுவத்தினருக்கே பெரிய அளவில் உயிரிழப்பும், தளபாட இழப்பும் ஏற்பட்டிருக்கின்றன. பெரிய அளவிலான ஆட்பலத்துடன், பெரிய அளவிலான ஆயுத சக்தியைப் பிரயோகித்து தனக்கு சாதகமான நிலப்பரப்பு வழியாக முன்னேற முயன்ற பெரும் படையணிகளை எதிர்த்து எமது சக்திக்கு ஏற்ற வகையில் நாம் சாதுரியமாகப் போராடினோம். பெரும் இடர்கள், ஆபத்துக்கள் மத்தியில் போராடியபோதும் பெருமளவில் உயிரிழப்புக்களை நாம் சந்திக்கவில்லை. இதனால் எமது படைப்பல சக்திக்கும், படையணிக் கட்டமைப்புக்கும் பாதிப்பு நிகழவில்லை. மரபு வழிப் போர் முறைக்கு புலிகளை ஈர்த்து எமது படைபலத்தை அழித்து விடலாம் என எண்ணிய இராணுவத்திற்கு இது ஏமாற்றத்தையே கொடுத்திருக்கிறது.

# யாழ்ப்பாணச் சமர் புலிகளுக்கு பின்னடைவே தவிர தோல்வியல்ல!

ஒட்டுமொத்தத்தில் யாழ்ப்பாணச் சமர் எமக்கு ஏற்பட்ட பின்னடைவே தவிர தோல்வியல்ல. அதுவும் ஒரு தற்காலிகப் பின்னடைவே தான். இந்திய ஆக்கிரமிப்புக் காலத்திலும் இதைவிட பெரிய பின்னடைவுகளைச் சந்தித்தோம். ஆனால் அந்தப் போரில் நாம் தோற்றுவிடவில்லை. இந்திய இராணுவமே இறுதியில் தோல்வியைச் சந்தித்தது. எனவே இன்றைய பின்னடைவே நாளைய வெற்றியாக மாறுவது திண்ணம்.

# வரலாற்றுப் பாடத்தை இராணுவம் படிக்க வெகுகாலம் செல்லாது!

சிங்கள இராணுவம் யாழ்ப்பாண மண்ணில் அகலக்கால் பதித்திருக்கிறது. பெரும் படையைத் திரட்டி நிலத்தைக் கைப்பற்றுவது கடினமான காரியமல்ல. ஆனால் கைப்பற்றிய நிலத்தில் காலூன்றி நிற்பது தான் கடினமான காரியம். உலகெங்கும் ஆக்கிரமிப்பாளர் எதிர்கொண்டவரலாற்று உண்மையிது. இந்த வரலாற்றுப் பாடத்தை சிறிலங்கா இராணுவம் படித்துக் கொள்வதற்கு வெகுகாலம் செல்லாது. படை பலத்தை அடிப்படையாகக் கொண்டே சிறிலங்கா அரசானது தமிழரின் அரசியற் தலைவிதியை நிர்ணயிக்க முனைகிறது; தமிழ்ப் பிரதேச ஆக்கிரமிப்பு மூலம் இராணுவ மேலாதிக்க நிலையில் நின்று தான் விரும்பிய குறைந்தபட்ச தீர்வு ஒன்றை தமிழ் மக்கள் மீது திணித்துவிட நினைக்கிறது. சமாதானத்திற்கான யுத்தமென்ற சந்திரிகாவின் கோட்பாடு, இத்தகைய இராணுவத் தீர்வையே மூலமாகக் கொண்டிருக்கிறது.

# போராட்டத்தைத் தீவிரமாக்குவதே எமக்குள்ள ஒரேயொரு வழி!

இத்தகைய தீர்வை மானமுள்ள தமிழன் எவனும் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை. இந்தத் திட்டத்தை முறியடித்து தன்னாட்சி நோக்கிய எமது விடுதலைப் போராட்டத்தை நாம் முன்னெடுத்துச் செல்வதாயின் எமக்கு ஒரேயொரு வழிதான் உண்டு. நாம் எமது படை பலத்தைப் பெருக்கி போராட்டத்தைத் தீவிரமாக்க வேண்டும். தமிழ் மக்கள் தமது அரசியற் தலைவிதியை தாமே நிர்ணயிப்பதாயின் தமிழரின் படைபலம் பெருக வேண்டும். எமது படையமைப்பைப் பலப்படுத்திக் கொள்வதன் மூலமே நாம் பாதுகாப்பாக வாழ முடியும்; நாம் எமது இழந்த மண்ணை மீட்டெடுக்க முடியும்; நாம் எமது சொந்த இடங்களுக்கு சுதந்திரமனிதர்களாக திரும்பிச் செல்ல முடியும்.

# நம் வரலாற்றின் அழைப்பிலிருந்து இளம் பரம்பரை ஒதுங்க முடியாது

### தேசியப் பணிக்கு விரைந்து வருவது நமது கடமை

தமிழர் தேசம் தமது படைபலத்தைக் கட்டியெழுப்ப வேண்டும் என்பது இன்றைய தவிர்க்க முடியாத வரலாற்றுத் தேவையாக எழுந்துள்ளது. தமிழினம் சிதைந்து அழிந்து போகாமல் பாதுகாப்பாக வாழ்வதற்கு இது அவசியம். போராடித்தான் வாழவேண்டும் என்ற நிர்ப்பந்தத்திற்கு தமிழ்த் தேசம் தள்ளப்பட்டிருக்கிறது. இந்தத் தேசியப் பணியிலிருந்து — வரலாற்றின் அழைப்பிலிருந்து — தமிழ் இளம் பரம்பரை ஒதுங்கிக் கொள்ள முடியாது. இதில் காலம் தாமதிப்பதும் எமது இனத்திற்குப் பேரழிவை விளைவிக்கக் கூடும். எனவே காலம் தாழ்த்தாது எமது விடுதலை இயக்கத்தில் இணைந்து கொள்ளுமாறு தமிழ் இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் வேண்டுகோள் விடுக்கிறேன். எவ்வளவு சீக்கிரத்தில் தமிழ் இளம் சந்ததி எமது இயக்கத்தில் இணைந்து கொள்கிறதோ அவ்வளவு சீக்கிரத்தில் நாம் எமது போராட்ட இலக்குகளை அடைந்து கொள்ள முடியும்.

மிகவும் நெருக்கடியான இக்காலகட்டத்தில் — எவ்வித உதவியுமின்றி ஓர் இனஅழிப்பு யுத்தத்தை நாம் தனித்து நின்று முகங்கொடுக்கும் இந்த இக்கட்டான நேரத்தில் — உலகத்தமிழினத்தின் உதவியையும் ஆதரவையும் நாம் வேண்டி நிற்கிறோம். குறிப்பாக வெளிநாடுகளில் வாழும் தமிழீழ மக்கள் எமது உரிமைப் போருக்குக் குரல் கொடுப்பதுடன் தம்மாலான உதவிகளையும் செய்யுமாறு அன்புடன் வேண்டிக் கொள்கின்றேன்.

எமது தேசத்தின் விடுதலைக்காக சாவை அரவணைத்து சரித்திரமாகி விட்ட எமது மாவீரர்களை நாம் நினைவு கூரும் இப்புனித நாளில் எந்த இலட்சியத்திற்காக ஆயிரமாயிரம் விடுதலை வீரர்கள் களப்பலியானார்களோ அந்த இலட்சியத்தை அடைந்தே தீருவோமென உறுதி எடுத்துக் கொள்வோமாக!

''புலிகளின் தாகம் தமிழீழ தாயகம்''

— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ)

## பயிலுநர் ஆசிரியர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம், நவ. 28

திட்டமிடல் அமைச்சின் கீழ் நியமனம் பெற்ற பட்டதாரிப் பயிலுனர் ஆசிரியர்களின் கொடுப்பனவு தொடர்பாகக் கலந்துரையாடுவதற்காக மேற்படி நியமனம் பெற்ற அனைத்து ஆசிரியர்களையும் நாளை புதன்கிழமை காலை 9.30 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் இயங்கும் கல்வித்திணைக்களத்துக்கு வருமாறு கேட்கப்கட்டுள்ளது. (உ)

## சமுகம் அளிக்க கோரிக்கை

சாவகச்சேரி, நவ. 28

மட்டுவில் வலய மேலதிக பிரதேச செயலர் காரியாலயத்தில் இணைக்கப்பட்ட சகல தரப்பு அலுவலர்களும் மட்டுவில் வலய நிரந்தர கிராம அலுவலர்களும் சரசாலை பிரதேச சபைக் காரியாலயத்தில் நாளை புதன்கிழமை காலை 9-00 மணிக்கு தவறாது சமுகமளிக்கும்படி கோரப்பட்டுள்ளனர். (இ)

## மாவீரர் தின...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் எழுச்சி பூர்வமாக ஆரம்பமாகின.

மாவீரர் நாளை முன்னிட்டு தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் 'புலிகளின் குரல்' வானொலி மூலம் நேற்று மாலை 5. 58 மணிக்கு தமிழீழ மக்களுக்கு உரையாற்றினார்.

அந்த உரையை வீட்டுக்கு வீடு வானொலிப் பெட்டிகள் மூலம் நேற்று மாலை மக்கள் ஆர்வத்தோடு செவிமடுத்தனர்.

முக்கிய சந்திகள் மற்றும் பொது இடங்களில் தலைவரின் உரை ஒலிபெருக்கிகளில் ஒலிக்கவிடப்பட்டது.

அவரது உரையைத் தொடர்ந்து சரியாக மாலை 6. 05 மணிக்கு கோவில்கள், தேவாலயங்களில் மணிகள் ஒலியெழுப்ப தமிழீழ மக்கள் அனைவரும் எழுந்து நின்று வணக்கம் செலுத்தினர்.

அதனை அடுத்து ஒளிச் சுடர்கள் ஏற்றப்பட்டன.

மக்கள் தமது இல்லங்கள் முன்பாக ஒளிச் சுடர்களை ஏற்றினர். பொது இடங்களிலும் ஒளிச் சுடர்கள் ஏற்றப்பட்டன.

அதன் பின்னர் மாலை 6 மணி 7 நிமிடத்துக்கு மாவீரர் துயிலும் இல்லங்களில் ஒளிச் சுடர் ஏற்றப்பட்டது.

மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தகொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தில் யாழ். மாவட்ட விசேட தளபதி இளங்குமரன் பொதுச் சுடரை ஏற்றிவைத்தார்,

அதனை அடுத்து மாவீரர்களின் கல்லறைகள், நினைவுக் கற்கள் என்பனவற்றுக்கு முன்பாக பெற்றோர்கள், உறவினர்கள் மற்றும் போராளிகள் ஆகியோர் திரண்டு நின்று ஒளிச்சுடர் ஏற்றினர்.

அச்சமயம் துயிலும் இல்லப் பாடல் இசைக்கப்பட்டது.

வலிகாமம் [கோப்பாய்] மாவீரர் துயிலும் இல்லத்தைச் சேர்ந்த ஆயிரத்து 884 மாவீரர்களுக்கும் கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்திலேயே ஒளிச்சுடர்கள் ஏற்றப்பட்டன.

வடமராட்சி மாவீரர் துயிலும்இல்லத்திலும்சுடரேற்றும் நிகழ்வு உணர்வு பொங்க நடைபெற்றது.

மாவீரர் துயிலும் இல்லங்களில் நடந்த நிகழ்வுகளில் பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்துகொண்டனர்.

வட தமிழீழத்தில் வன்னிப் பெருநிலப்பரப்பிலும், தென் தமிழீழத்தின் பெரும் பகுதிகளிலும் மாவீரர் தினம் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டதாக செய்திகள் கிடைத்துள்ளன.

(ஐ-3-15-30-173-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி
## தனலட்சுமி நமசிவாயம்

உடுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி தனலட்சுமி நமசிவாயம் நுணாவில் மேற்கில் 16-11-95 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முன்னாள் அதிபர் மு. நமசிவாயத்தின் பிரியபத்தினியும், சகுந்தலாதேவி, திலகவதி (ஆசிரியை உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம்), சாரதாதேவி (இளைப்பாறிய மருந்தாளர்), காலஞ்சென்ற சரோஜினிதேவி (சுருக்கெழுத்தாளர், யாழ். கல்வித் திணைக்களம்), கமலாதேவி, விவேகானந்தன் (பொறியியலாளர், கொழும்பு), நித்தியானந்தன் (கனடா), கிருஷ்ணானந்தன் (U. K.) ஆகியோரின் பாசமிகு தாயாரும், K. தெய்வேந்திரன் (Rtd. Chief Clerk, Highways), Dr. S. காசிநாதன் (U.K.), Dr.V. ஆறுமுகம் (சத்தி வைத்தியசாலை, பளை), S. நரேந்திரசிங்கம் (ஜேர்மனி), V. ஞானேந்திரன் (Store - keeper, A.C.I. Ltd., Ratmalana), சதாநாயகி (Programme Officer, Oxfam, Colombo-5), சொரூபன் (கனடா), ஜீவராஜி (U.K.) ஆகியோரின் அன்பு மாமியும், சிவப்பிரகாசத்தின் அன்புச் சகோதரியும், செழியன் (கனடா), பராபரன் (Affiliated, University College, Polgolla), ஹரிராம், மோகன்ராம் (University of Moratuwa), தேவகணேஸ்வரன், பாலமயூரன், யோகேந்திரன் டிலோஷன், ஆராதனன், ஆதித்தன், ஆரணியன், நிவேதன், லாவண்யன், கார்த்திகா, அபிராமி, துவாரகா, இந்துமதி. டிரோஷனா ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நுணாவில் மேற்கு, காந்காளம்பிட்டி மயானத்தில் 16-11-95மாலை 6 மணிக்கு தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கா. தெய்வேந்திரன்
(மருமகன்)
மல்வம்,
உடுவில்.

தற்போதைய முகவரி:
மே/பா. சி. பொன்னுத்துரை,
'சிவ மஹால்'
பாபு கோணேசன் வீதி,
நுணாவில் மேற்கு.

[39291]

## சானைக்குட்டி பாணுவதி
[ஆத்தைப்பிள்ளை]

மாவிட்டபுரம், கீரிமலை வீதியை வசிப்பிடமாகக் கொண்டவரும், தற்போது கைதடி நுணாவிலில் வசித்தவருமாகிய சானைக்குட்டி பாணுவதி [ஆத்தைப்பிள்ளை] 27-11-95 காலமாகிவிட்டார்.

இவர் சானைக்குட்டியின் அன்பு மனைவியும், தனபாலசிங்கம் [மாவீரர் - ராம்], ஜெயபாலசிங்கம் (லங்கா சிமெந்து லிமிட்டெட்), தவபாலசிங்கம், குணபாலசிங்கம் (ஜேர்மனி), யோகபாலசிங்கம், சறோஜினிதேவி, ரஞ்சினிதேவி, மாலினிதேவிஆகியோரின் அன்புத் தாயாரும், சி. கந்தசாமி, சி. கந்தசாமி, ஜெ. புஸ்பராணி ஆகியோரின் மாமியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச. யோகன்
[மகன்]

தற்போதைய முகவரி:
சிவமலர் வீதி,
கைதடி, நுணாவில்.

[39401]

## கணபதிப்பிள்ளை-தில்லைநடராசா
(சந்திரன்)
(கரன் கைத்தொழிலகம், உடுப்பிட்டி)

தம்பாலை அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், ஏழாலை மத்தியை வசிப்பிடமாகவும், தற்பொழுது இமையாணன் மேற்கு உடுப்பிட்டியில் வசித்தவருமான கணபதிப்பிள்ளை - தில்லைநடராசா (சந்திரன் ''கரன் கைத்தொழிலகம்,'' உடுப்பிட்டி) நேற்று சிவபதமடைந்துவிட்டார்.

இவர் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், சுலோசனாவின் அன்புக் கணவரும் சாந்தரூபி, நிருஷா, கிரிசாந்த், சுரேஷ்காந்த் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற செல்லத்துரை, சரஸ்வதி ஆகியோரின் அன்பு மருமகனும், நடராசா - இரத்தினத்தின் அன்பு பெறாமகனும், கமலாதேவி, சறோஜினிதேவி, யசோதாதேவி, அற்புதராசா (கரன் கைத்தொழிலகம், உடுப்பிட்டி), முத்துராசா (கனடா), யோகேஸ்வரன் (பொன் குஞ்சு) விக்னேஸ்வரன் (மீனா கைத்தொழிலகம், ஆவரங்கால்), மீனலோஜினி ஆகியோரின் அன்புச் சகோதரனும், வெங்கடாசலம்(கோப்பாய் உ,அ,அ. பணிமனை), நாகராசா S. C. S. சிதம்பரநாதன் (ஆசிரியர்), வைரவநாதன் (இந்தியன் ஓவசீஸ் வங்கி) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று காலை 10.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் வல்லை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த. அற்புதராசா (ராசு)
(தம்பி)

துவாளி வீதி,
இனமயாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

(39400)

## வீரவணக்க நிகழ்வு

சாவகச்சேரி, நவ. 28

வலிகாமம் பகுதியில் நேற்று வீரச்சாவடைந்த மூன்று வேங்கைகளின் வித்துடல்கள் இன்று தென்மராட்சி கோட்ட மாவீரர் பணிமனைச் செயலகத்தில் பெற்றோரின் வருகைக்காக வைக்கப்பட்டிருக்கும்.

வீரவேங்கை சத்தியபாலன் அல்லது நியூட்டன் (வாசுதேவன் ஜெகன் மோகன் — யாழ் வீதி யாழ்ப்பாணம்). வீரவேங்கை இசைஞானி (திருபாலன் சிவகுமார் — தீசன் வீதி மல்லாகம்), வீரவேங்கை சீலன் (உலகசேகரம் இராஜேந்திரம் — தாவடி வடக்கு) ஆகிய மூவரின் வித்துடல்களே அங்கு வைக்கப்பட்டிருக்கும். பின்னர் பிற்பகல் 3 மணிக்கு வித்துடல்கள் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இறுதி வீர வணக்கத்துக்காக வைக்கப்பட்ட பின் கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்படும்

(ஐ)

## இந்திய மத்தியஸ்தம் தேவையாம்

கொழும்பு, நவ. 28

அரசாங்கத்தையும், விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் பேச்சுவார்த்தைக்கு இட்டுச்செல்ல இந்தியாவால் மட்டுமே முடியும்.

— ஈ. பி. ஆர். எல் எவ். பொதுச் செயலாளர் திரு. சுரேஷ் பிரேமசந்திரன் கொழும்பில் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

போரில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரிடையேயும் மத்தியஸ்தம் செய்யும் முயற்சியை ஆரம்பிக்குமாறு அவர் வேண்டுகோள் விடுத்தார்.

இந்த வேண்டுகோளை இந்தியா மறுக்குமானால் மேற்கு நாடுகள் தலையிடக்கூடிய நிலை ஏற்பட்டு அதனால் இந்தியத் துணைக்கண்டத்தில் உறுதிப்பாடற்ற நிலைமை உருவாகலாம் என்றும் அந்தப் பேட்டியில் அவர் தெரிவித்தார். (ஐ)

2 ஆம் பக்கத்திலும் மரண அறிவித்தல்

ஸ்ரீலங்காப் படையினர்

## நகரின் மையப் பகுதிக்கு முன்னேற முயற்சியாம்

கொழும்பு, நவ. 28

சூரியப் பிரகாசம் இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினர் கொழும்புத்துறையில் இருந்தும், நல்லூரில் இருந்தும் யாழ். நகரின் மையப்பகுதியை நோக்கி முன்னேறத் தொடங்கியுள்ளனர் என்று பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் நேற்று அறிவித்தது.

யாழ். மாநகர சபைப் பகுதியை பிறை வடிவில் சுற்றி வளைத்துள்ள படையினர் அரியாலையில் இருந்து சுண்டிக்குளி வழியாகவும்— கொழும்புத்துறையில் இருந்து குருநகர் வழியாகவும் யாழ்.நகரின் மையப்பகுதியை நோக்கி முன்னேறத் தொடங்கியிருப்பதாக இராணுவ அதிகாரி ஒருவர் கொழும்பில் தெரிவித்தார்.

யாழ். செயலகம், யாழ். மாநகர சபை, பெரியகடைப் பகுதி, யாழ். பஸ் நிலையம் என்பனவற்றைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரும் நோக்கிலேயே படையினர் தற்போதைய நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாகவும் அந்த அதிகாரி கூறினார். (இ-ஐ-3)

## உயரமான நிலையிலிருந்து புலிகள் கடும் தாக்குதல்

கொழும்பு, நவ. 28

யாழ். நகரின் மையப் பகுதியை நோக்கி முன்னேறும் படையினர் புலிகளின் கடும் எதிர்ப்பை எதிர்நோக்கி வருவதாக நடவடிக்கைத் தலைமையகம் நேற்று அறிவித்துள்ளது.

உயரமான தற்காப்பு நிலைகளில் தயாரான நிலையில் இருந்து விடுதலைப் புலிகள் நடத்திய கடும் தாக்குதலை படையினர் சமாளிக்க வேண்டி இருந்ததாகவும் — அத்தாக்குதலை முறியடிக்க படையினர் கவச வாகனங்களில் இருந்து துப்பாக்கி பிரயோகம் செய்ய வேண்டியது அவசியமாகியதாகவும் நடவடிக்கைத் தலைமையகம் மேலும் தெரிவித்தது.

இதற்கிடையில் யாழ்நகரை ஸ்ரீலங்காப் படையினர் கைப்பற்றுவது ஒரு கடினமான காரியமாகத் தான் இருக்கும் என்று பி.பி.ஸி. கொழும்புச் செய்தியாளர் ஜோர்ஜ் ஆர்னி நேற்றுத் தெரிவித்தார்.

# மரண அறிவித்தல்

## திருமதி சரஸ்வதி பொன்னையா
(சின்னம்மா)

மட்டுவில் தெற்கைச் சேர்ந்த திருமதி சரஸ்வதி பொன்னையா நேற்று (27-11-95) காலமானார்.

இவர் சாணையன் பொன்னையாவின் அன்பு மனைவியும். நாகரத்தினம் (ரவி - ஜேர்மனி), திருமதி சந்திரகாந்தா (ராதா – சுவிஸ்), நாகேஸ்வரன் (ஈசன் - சுவிஸ்), நகுலேஸ்வரன் (நாதன் – சுவிஸ்), சந்திரவதனி (வனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி ஜெலஜா நாகரத்தினம் (ஜேர்மனி), துரைசிங்கம் (சுவிஸ்), சுனித்திரா ஆகியோரின் அன்பு மாமியாரும், செல்வி வேணுஜாவின் அன்புப் பேர்த்தியும், தங்கம்மாவின் அன்புச் சகோதரியும், கைலாயர், மீனாட்சி, நாகமுத்து, சின்னம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் கேட்கப்படுகின்றனர்.

தகவல்:
ச. கிருஷ்ணன் (ஆசிரியர்)
(சகோதரர்)
யா/சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயம், மட்டுவில்.

(39399)


★ புதிய கிளை நிறுவனம் ★

இ. சுப்பிரமணியம்

மிதிவண்டி, மிதிவண்டி உதிரிப்பாகங்கள், பாவனைப் பொருள்கள்

விற்பனை அகம்

இல. 8, காங்கேசன் நெடுஞ்சாலை, சுன்னாகம்.
இல. 77, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

ஆகிய முகவரிகளில் வாடிக்கையாளர்களின் தேவைகளை பூர்த்தி செய்து வந்த எமது வாணிப நிலையம் தனது புதிய கிளை நிறுவனத்தை

புதிய அங்காடிக் கட்டடம்

கொடிகாமத்தில் (கொடிகாமம் சந்தி)

27 - 11 - 1995 இல் ஆரம்பித்துள்ளதனை அன்புக்குரிய வாடிக்கையாளர் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

உரிமையாளர்கள்


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 28-11-95 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org